**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(16.11.2016 முதல் 20.11.2016)**

**அறிக்கை எண் : 92/2016** **தேதி:15.11.2016**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 29° செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 17°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 19°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 7° செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (16.11.2016 முதல் 20.11. 2016)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 17.11.16 மற்றும் 18.11.16 மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 47 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 16.11.2016 | 0 | 32 | 24 | 5 | 75 | 47 | 8 | கிழக்கு |
| 17.11.2016 | 5 | 32 | 24 | 5 | 75 | 47 | 8 | கிழக்கு |
| 18.11.2016 | 4 | 32 | 24 | 5 | 75 | 47 | 8 | கிழக்கு |
| 19.11.2016 | 0 | 32 | 24 | 5 | 75 | 47 | 8 | கிழக்கு |
| 20.11.2016 | 0 | 32 | 24 | 5 | 75 | 47 | 8 | கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ இரவு நேர வெப்பநிலை குறைந்து வருவதால், பூக்கும் பருவத்தில் உள்ள சம்பா நெற்பயிரில் ஏற்படும் துத்தநாக சத்து குறைபாட்டினை தவிர்க்க 0.5 சதம் துத்தநாக சல்பேட் மற்றும் 1 சதம் யூரியா கலந்து மாலை நேரத்தில் தெளிக்கவும்.
- ✓ பெறப்படும் மழையைப் பயன்படுத்தி மானாவாரி களிமண்ணில் கொண்டைக்கடலை விதைக்கவும்.
- ✓ வரும் நாட்களில் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் 9 முதல் 10 மாதங்களான வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ கால்நடைகளில் தென்படும் பூச்சிகளை கட்டுப்படுத்த காலை நேரங்களில் மாட்டுத் தொழுவத்தை உயிர் வேதியியல் கரைசலில் கிருமிகளை அழிக்கின்ற பொருளை சேர்த்து சுத்தப்படுத்தவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ இரவு நேர வெப்பநிலை குறைந்து வருவதால், பூக்கும் பருவ சம்பா நெற்பயிரில் ஏற்படும் துத்தநாக சத்து குறைபாட்டினை தவிர்க்க 0.5 % துத்தநாக சல்பேட் + 1 % யூரியா கலந்து மாலை நேரத்தில் தெளிக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**

**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**

**த.நா.வே.ப.கழகம், கோவை.**